கடந்த மாத பதிவுகள்

முதற்பக்கம்
அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
அறிவுடன்
கிருத்தியம் பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 14.08.2011

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் அனுபவத்தொடர் - 9

**நள்ளிரவில் மீண்டும் ஒரு பயணம்!**



உறக்கமில்லாமல் நான் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் மீண்டும் காலடியோசைகள் கேட்டன. எங்கோ சென்றுவிட்டு வந்த சின்னவனும் மற்றவனும், நான் தங்க வைக்கப்பட்டிருந்த அறைக்குள் வந்து, “ஐயா எழும்புங்கோ போவம்” எனக் கூறினர்.

அவர்களிடம் ‘எங்கே? ஏதுக்கு?’ என்று கேட்க முடியாதாகையால், மௌனமாகப் புறப்பட்டேன்.

என்னை வெளியே கூட்டிவந்த அவர்கள், தமது சைக்கிள் ஒன்றில் என்னை ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். இப்பொழுது அவர்கள் எனது கண்களை கறுப்புத் துணிகளால் கட்டவில்லை.

அங்கிருந்து புறப்பட்ட அவர்கள், யாழ் நகருக்குச் செல்லாமல், மடத்தடி வீதியால் சென்று, ஸ்ரான்லி வீதியால் திரும்பி, ஆரியகுளம் சந்தியை அடைந்து, பருத்தித்துறை வீதியில் பயணிக்க ஆரம்பித்தனர். பின்னர் நல்லூர் கந்தசாமி கோவில் பின் வீதியால் பயணித்து, முடமாவடிச் சந்தியைத் தாண்டி, இராச வீதியில் செல்ல ஆரம்பித்தனர். நேரம் அதிகாலை 3 மணியைத் தாண்டியிருந்ததால், வீதிகள் யாருடைய நடமாட்டமுமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. வீதியில் படுத்திருந்த சில நாய்கள் மட்டும், எம் மூவரையும் பார்த்து எழுந்து நின்று குலைத்துவிட்டு மீண்டும் சுருண்டு படுத்துக் கொண்டன. இந்த மார்கழி மாத குளிருக்கு அவைக்கு ஒரு சாம்பல் மேடு கிடைத்திருந்தால், வெதுவெதுப்பாகவும், சொர்க்கமாகவும் இருந்திருக்கும். நகரில் ஏது சாம்பல் மேடு? இப்போதைக்கு தார் வீதிதான் அவைக்குச் சொர்க்கம் போலும்!

அந்த வீதியில் செல்லும் போது, கல்வியன்காட்டுக்குச் செல்லும் வீதி குறுக்கிடும் இடத்தில் இராமசாமி பரியாரியாரின் வீடு உள்ளது. இந்தச் சந்தியைக் கடக்கும் போதெல்லாம், எனக்கு ஒரு விடயம் எப்பொழுதும் ஞாபகத்துக்கு வருவதுண்டு.

புலிகள் ரெலோ இயக்கத்தின் மீது தடை விதித்து, அவர்களை கலைத்துக் கலைத்துச் சுட்டபொழுது, இந்தச் சந்தியில் அவர்கள் இருபகுதியினருக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையை எம்மில் சிலர் நேரடியாகவே பார்த்த அனுபவம் உண்டு. அன்று புலிகளின் கொலைத் தாக்குதலில் இருந்து தப்பியோடிய சில ரேலோ உறுப்பினர்களை, மனிதாபிமான அடிப்படையில் நாம் அன்று எமது சைக்கிள்களில் ஏற்றிக் கொண்டு கல்வியன்காடு புதுச் செம்மணி வீதி வழியால் கொண்டு சென்று, திடல் என்ற இடத்திலிருந்த அவர்களது பாதுகாப்பான இடத்தில் விட்டோம். அவர்கள் ‘புலி வேட்டை’யிலிருந்து தப்பினார்களா இல்லையா என்பதை இன்றுவரை யானறியேன்.

இராமசாமி பரியாரியார் வீட்டுச் சந்தியை அடைவதற்கு சற்று முன்னதாக, இடது புறம் ஒரு தோட்டவெளி உண்டு. அந்த நேரத்தில் திடீரென எனக்கு விபரீதமான ஒரு எண்ணம் தோன்றியது. என்னை ஏற்றிச் சென்றவர்கள், என்னைப் பற்றிய முன்னெச்சரிக்கைப் பயம் ஏதுமின்றி, களைப்பு, நித்திரையின்மை என்பன காரணமாக மிகவும் சோர்ந்த நிலையில் ஒருவரோடு ஒருவர் பேசாமல் தூங்கி வழிந்துகொண்டு வந்து கொண்டிருந்தனர். சின்னவன் நடுவில் வர என்னை ஏற்றியிருந்தவன், வீதியின் அருகால் தோட்டக்கரைப் பக்கம் வந்து கொண்டிருந்தான்.

இந்த அகால வேளையில் இவர்களைத் தள்ளி விழுத்திவிட்டு, தோட்டத்துக்குள்ளால் பாய்ந்து ஓடி விடுவோமா என்ற யோசனை எனது மூளையில் பொறி தட்டியது. ஓடுவதானால் இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் அதைத் தீர்மானித்துவிட வேண்டும். அவர்களுக்கு எனக்குத் தெரிந்த அளவுக்கு அந்த இடம் பரிச்சயமானதல்ல. ஆனால் ஓடுவது பாதுகாப்பானதா என்ற கேள்வியும் என் மனதில் எழுந்தது.

முதலாவது விடயம், சின்னவன் போன்ற பொறுப்பான பதவி வகிப்பவன், நிச்யமாக கைத்துப்பாக்கி இன்றிப் புறப்பட்டிருக்கமாட்டான். எனவே உடனடியாகவே என்னை அவன் சுடுவதற்கு வாய்ப்புள்ளது. இரண்டாவது, அதிலிருந்து நான் தப்பி ஓடினாலும், தோட்டவெளி தாண்டி ஊர் மனைக்குள் நான் ஓடும்போது, நாய்கள் குரைத்து ஊர் மக்களை எழுப்பிவிடும். அவர்களே என்னைப் பிடித்து அவர்களிடம் ஒப்படைத்துவிடவும் கூடும். சில வேளைகளில் நாய்களே என்னைப் பிய்த்துப் பிடுங்கி பதம் பார்த்துவிடவும் கூடும். அப்படித்தான் இவற்றிலிருந்து நான் தப்பிவிட்டாலும், அவர்களது சூடை வலை போன்ற நெருக்கமான பாதுகாப்பு வலைப் பின்னலிலிருந்து எத்தனை நாளைக்கு மறைந்து வாழ முடியும்? நான் சரணடையும் வரை எனது மனைவியையும் பிள்ளையையும் நிச்சயமாக பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொள்வார்கள். எனவே எனது எண்ணத்தைக் கைவிட்டேன்.

அவர்கள் இராமசாமி பரியாரியார் வீட்டுச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கித் திரும்பி, திருநெல்வேலி சந்தியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். சந்தியை அடைந்ததும் சைக்கிளை நிறுத்தி என்னை இறங்கும்படி பணித்தனர். நான் நீண்டகாலமாக புத்தகக்கடை வைத்திருந்த, யாழ் பல்கலைககழக அயலிலிருந்த, நான் இரவும் பகலும் தினசரி உலவிய அந்த திருநெல்வேலி மண்ணில் மிதித்து, அந்த இடத்தைப் பார்த்ததும், எனது மனதில் உணர்ச்சிகள் பிரவாகித்து, மனம் கலங்கியது.

எங்கள் மூவரையும் அந்த அகால வேளையில் கண்ட, அங்குள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொணடிருந்த தனியார் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் எமக்கருகில் வந்து விபரமறிய முயற்சித்தார்.

அவரை அங்கிருந்து விரட்டும் நோக்குடன், சின்னவன் தனது இடுப்பில் சொருகியிருந்த பிஸ்டலை வெளியே எடுத்து, அதை சரி பார்ப்பது போலப் பார்த்துக் கொண்டு, அந்த பாதுகாப்பு ஊழியரை அப்பொழுதுதான் கண்டது போல, “அண்ணைக்கு என்ன வேணும்?” எனக் கேட்டான்.

அவர்கள் யார் என்பதைப் புரிந்துகொண்ட அந்தப் பாதுகாப்பு ஊழியர், “இல்லை சும்மா பார்த்தனான்” என்று சொல்லிக் கொண்டே வெகு வேகமாக அங்கிருந்து நழுவிவிட்டார்.

அதன் பின்னர் அந்த ‘சித்திர புத்திரர்கள்’ மீண்டும் எனது கண்களை கறுப்புத் துணியால் கட்டிவிட்டு, என்னை ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். இப்பொழுது நான் அவர்கள் எத்திசையில் செல்கிறார்கள் என்பதை, வெகு கவனமாக அவதானிக்கத் தொடங்கினேன்.

முதலில் சைக்கிள் திருநெல்வேலிச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கித் திரும்பியது. எனவே காங்கேசன்துறை வீதியிலிருந்த கொக்குவில் நோக்கிச் செல்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். தொடர்ந்து சென்ற சைக்கிள் நான் எதிர்பார்த்தபடியே யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைத் தாண்டி, புகையிரதப் பாதையைக் கடந்தது.

மருத்துவ பீடத்தில் உடற் கூற்றியல் பேராசிரியையாக பணிபுரிந்த ரரஜினி திராணகமவை, இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில், புலிகள் பட்டப்பகலில் வீதியில் வைத்துத் துடிக்கப் பதைக்க சுட்டுப் படுகொலை செய்த அந்த இடத்தைக் கடந்த போது, எனது மனது மிகவும் சோகமாக மாறியது.

தேனீ இணைய
10வது வருட
22.02 2002- 22.02.201

டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு
தேனீ இணையத்தளத்தி தோழர் மணியம் தொட எழுதும் புலிகளின் வதைமுகாம் அனுபவங்
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுது அனுபவத்தொடர்
யாழ்ப்பாணத்தில் சாதி அரசியல் செயற்படும் முறை
அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (1 )
அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (2

அந்த மருத்துவ பீடத்துக்கு அருகாமையிலேயே வசித்து வந்த ராஜினியின் வீட்டுக்கு, நான் பல தடவைகள் சென்று உரையாடியிருக்கிறேன். யாழ் பல்கலைக்கழகத்தின் கணிதபீட விரிவுரையாளரும், எனது நீண்ட நாளைய நண்பருமான கலாநிதி கே.சிறீதரன,; ராஜினியை எனக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார்.

பல போலித் தமிழ்ப் புத்திஜீவிகள் போலல்லாது, தமிழ் சமூகத்துக்கு உண்மை விசுவாசத்துடன் ஏதாவது நல்லது செய்ய வேண்டுமென்பதற்காக, தனது உயிரையே துச்சமாக மதித்து வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் ராஜினி. லண்டனில் புலிகள் இயக்கத்தை தமிழர்கள் மத்தியில் அறிமுகம் செய்வதில் வேறு எவரும் ஆற்றாத பங்களிப்பை வழங்கிய ராஜினி, புலிகள் தவறான பாதையில் செல்கிறார்கள் எனக் கண்டதும் தனது விமர்சனங்களைத் துணிச்சலுடன் முன்வைத்தார். அதற்கு அவருக்கு புலிகள் வழங்கிய பரிசுதான் இந்த மரண தண்டனை!

ராஜினி, கலாநிதி சிறீதரன், டாக்டர் தயா சோமசுந்தரம், கலாநிதி ராஜமோகன் ஆகிய நால்வரும் இணைந்து எழுதிய 'முறிந்த பனை' என்ற நூல், இலங்கை – இந்திய இராணுவங்களும், புலிகளும் செய்த பல மனித உரிமை விரோதச் செயல்களை அம்பலப்படுத்தியதால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைத் தீர்த்துக்கட்டிவிட்டால், அந்தப் பழி இந்திய அமைதிப்படை மீதும், அவர்களுடன் அந்த நேரத்தில் சேர்ந்து இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் மீதும் விழும் என்று திட்டம் போட்டே, புலிகள் கனகச்சிதமாக அந்தக் கொலையைச் செய்திருந்தனர்.

சிறிது காலம் அவர்களது தந்திரம் வேலை செய்ததாயினும், மிக விரைவிலேயே அவரது கொலையின் சூத்திரதாரிகள் புலிகள்தான் என்பது அம்பலத்துக்கு வந்துவிட்டது.

ராஜினியின் சிந்தனையிலிருந்து நான் மீள்வதற்கு முன்னரே, கொக்குவில் சந்தியை நாம் அடைந்துவிட்டோம் என்பதை உணர்ந்தேன். இப்பொழுது சைக்கிள் சந்தியில் வலது பக்கம் திரும்பி வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கியது. அதாவது கே.கே.எஸ். வீதியில் சுன்னாகம் பக்கமாகச் செல்லத் தொடங்கினோம். ஒரு ஐந்து நிமிடம் வரையில் ஓடிய பின்னர், சைக்கிள்கள் மேற்கு நோக்கித் திரும்பின.

எனக்கு ஒன்று புரிந்தது. அதாவது சைக்கிள்கள் குளப்பிட்டி சந்தியை அடைந்து, அங்கிருந்து ஆனைக்கோட்டை நோக்கிப் பயணிக்கின்றன. சுமார் 20 நிமிடங்கள் ஓடிய பின்னர், வலது பக்கமாக ஒரு கிரவலும், மணலும் சேர்ந்த ஒழுங்கையில் திரும்பி, சிறிது தூரம் சென்று ஒரு கேற்றைத் திறந்து ஒரு வீட்டின் முன்னால் நின்றன.

இப்பொழுது எனது கண்களின் மேல் கட்டியிருந்த கறுப்புத் துணி அவிழ்க்கப்பட்டுவிட்டது. இயல்பு நிலைக்குப் பார்வையைக் கொண்டுவர சிறிது நேரம் பிடித்தது.

நிர்மலமான வானத்தில் நிலவு பால் பொழிந்து கொண்டிருந்தது. மார்கழி மாதத்து சீதளக்காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது.

அந்த வீடு சுமாரான ஒரு பெரிய வீடு போலத் தோன்றியது. முன்னர் என்னை அழைத்துச் சென்ற முகாம்களைவிட இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக இருந்தது போலத் தோன்றியது. அருகில் சில பெரிய மரங்கள் நின்றன. அங்குமிங்குமாக சில சிறிய குடிசைகள் போன்றவை நிலவொளியில் தென்பட்டன. என்னை விறாந்தையில் இருந்த வாங்கு ஒன்றில் இருக்கச் சொன்ன பின்னர், ஒருவன் ஒரு பெரிய கொப்பியுடன் வந்து, எனது பெயர் முகவரி என்பனவற்றைக் குறித்துக் கொண்டான்.

பின்னர் அவன் என்னை நோக்கி, " என்ன குற்றச்சாட்டிலை உங்களைப் பிடிச்சது?" என வினவினான். எனக்கு அவனது கேள்வி அதிசயமாக இருந்தது. ஏனெனில் இதுவரை நேரமும் என்னை அவர்கள் என்ன காரணத்துக்காக கைதுசெய்தார்கள் என்பதைத் தெரிவிக்கவில்லை.

நான் "தெரியாது" எனப் பதிலளித்தேன்.

"ஐயாவுக்கு இப்ப தெரியாது. நாங்கள் கேட்கிற மாதிரிக் கேட்கேட்கை எல்லாம் தன்ரைபாட்டிலை வரும்" என்று அங்கிருந்த ஒருவன் கிண்டலாகவும், கோபமாகவும் கூறினான்.

பின்னர் ஒரு பாயைக் கொண்டுவந்து உள் விறாந்தையில் போட்டு, அதில் என்னைப் படுக்கும்படி ஒருவன் கூறினான். நான் சிறுநீர் கழிக்க வேண்டும் எனக் கேட்டேன்.

அதன்பின்னர் ஒருவன் என்னை வீட்டின் பின்புறம் உள்ள வேலிக்கு அருகாமையில் அழைத்துச் சென்றான். அவனுடன் இன்னொருவனும் கூட வந்தான். இருவர் கையிலும் ஏ.கே.47 துப்பாக்கிகள் இருந்தன. அவர்கள் சற்றுத் தள்ளி நின்றுகொண்டு, "இஞ்சை எல்லா இடமும் எங்கடை ஆக்கள் நிக்கினம். ஓட நினைச்சால் வெடிதான். பிறகு கவலைப்படக்கூடாது" எனக் கூறினர்.

நான் எனது உபாதையைத் தீர்த்துவிட்டு திரும்பவும் அவர்களுடன் வந்தேன். பாயில் படுத்தும் நித்திரை வரவில்லை. மனதில் பல பல சிந்தனைகள் அலைபாய்ந்த வண்ணம் இருந்தன. உதயத்தின் அறிகுறிகள் மெல்ல மெல்லக் கேட்கத் தொடங்கின.

திடீரென இரும்பு சங்கிலிகள் ஒன்றுடன் ஒன்று உராயும் ஒலிகளும், கொறட்டை சிலவும் கேட்டன. கொஞ்சம் தள்ளி பெரிய கைவிளக்கொன்று, காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட தனது சுடரைப் பாதுகாக்கப் படாதபாடு பட்டவாறு எரிந்து கொண்டிருந்தது. அதன் மங்கிய ஒளியில் ஒரே மாதிரியான சிவப்பு நிறச் சாரங்களை அணிந்த பல மனிதர்கள், கிழங்கு அடுக்கியது போல, நிரையாகப் படுத்திருப்பது தெரிந்தது.

நாளை நானும் அவர்களில் ஒருவனாகப் படுத்திருப்பேன் போலும் எனத் தோன்றியது

தொடரும்.....

முன்னைய பதிவுகள்